தமிழில் விவிலியம்
நேற்றும் இன்றும்

அருள்பணி. ஞா. பிலேந்திரன்
கிறிஸ்தவ நாகரிகத்துறை
யாழ். பல்கலைக்கழகம்.

வெளியீடு
மறைக்கல்வி நிலையம்
யாழ்ப்பாணம்.

Thamilil Viviliyam Netrum Inrum

நூல் : தமிழில் விவிலியம் நேற்றும் – இன்றும்

ஆக்கம் : அருள்பணி ஞானமுத்து விக்ரர் பிலேந்திரன்

முதற்பதிப்பு : ஆடி 1999, 1500 பிரதிகள்

அச்சகம் : புனித வளன் கத்தோலிக்க அச்சகம், பிரதான வீதி, யாழ்ப்பாணம்

வெளியீடு : மறைக்கல்வி நிலையம், யாழ்ப்பாணம்

அச்சிடலாம்

✠ **தோமஸ் சவுந்தரநாயகம்**
யாழ் ஆயர்.

(இந்த அனுமதி இவ்வெளியீட்டில் கூறப்பட்டுள்ள கருத்துக்கள் கிறிஸ்தவ விசுவாச உண்மைகளுக்கும் அறவிதிகளுக்கும் மாறானவை அல்ல என்பதற்கு அத்தாட்சியேயன்றி அவை திருச்சபையின் போதனை என்பதற்கல்ல)

பொருளடக்கம்

அ. **தமிழ் விவிலிய மொழி பெயர்ப்பின் வரலாறு.**

1. விவிலிய தமிழ்மொழிபெயர்ப்பில் கத்தோலிக்க திருச்சபையின் பங்கு.
2. விவிலிய தமிழ் மொழிபெயர்ப்பில் சீர்திருத்த சபையின் பங்கு.

ஆ. **திருவிவிலிய மொழி பெயர்ப்பிற்கான முன் ஆயத்தங்கள்.**

இ. **மொழிபெயர்ப்புக் குழுவினர் எதிர்நோக்கிய சிக்கல்கள்.**

1. பொது விவிலியத்தில் எத்தனை நூல்கள் இடம் பெற வேண்டும்?
2. பாடச்சிக்கல்.
3. பெயர்கள் பற்றிய சிக்கல்.
4. சில சிக்கலான சொற்களின் மொழிபெயர்ப்புகள்.

ஈ. **பொது மொழி பெயர்ப்பின் சில சிறப்பான பண்புகள்.**

1. இனிய எளிய தமிழ் நடை.
2. தெளிபொருள் மொழிபெயர்ப்பு.
3. 6 ஆம் வேற்றுமைத் தெளி பொருள் தெளிவு.
4. உருவகங்களுக்கு பொருள் தெளிவு.
5. மரியாதைப்பன்மை.
6. ஆண்பெண் சமத்துவம்.
7. ஏனைய சிறப்புகள்.
8. பொருத்தமான தலைப்புகள்.
9. அடிக்குறிப்புகள்.
10. விவிலிய வரலாற்றுக் காலஅட்டவணை.
11. விவிலிய அளவைகளும் அவற்றின் இணைகளும்.
12. விவிலிய நிகழ்ச்சிப் பகுதிகளின் படங்கள்.

நிறைவுரை

பின் இணைப்பு.

உட்புகுமுன்

யாழ் மறைமாவட்டத்தின் பொது விவிலிய அறிமுக விழா ஒக்டோபர் திங்கள் 8ஆம் நாள், 1998 ஆம் ஆண்டு மறைக்கல்வி இயக்குனர் அருள்பணி R. C. X. நேசராசா அவர்களினால் ஒழுங்கு செய்யப்பட்டு, நடத்தப்பட்டது. அன்றைய நிகழ்வில் பொது விவிலிய மொழிபெயர்ப்புப் பற்றிய ஆய்வுரை நிகழ்த்தும்படி மறைக்கல்வி இயக்குனர் அழைத்தார்கள். அவர்கள் அழைப்பை ஏற்று இவ் ஆய்வு ரையை தயார் செய்தேன்.

இவ் ஆய்வுரைக்கான உட்பொருளின் பெரும் பகுதியை அருள்பணி F. எரோணிமுசு எழுதிய பொது விவி லியம் ஓர் அறிமுகம் என்னும் சிறிய நூலிலிருந்தே பெற்றுக்கொண்டேன். இவ்வுரையை அச்சிடும்படி பலர் கேட்டுக்கொண்டார்கள். பலருக்கும் பயன்படும் என்னும் நோக்குடன் இதை அச்சிடுகின்றேன். இது அச்சுவடிவம் பெறுவதற்குப் பலவகையில் சேவை நல்கிய செல்வி. ஜெறின் பெர்ணாண்டோ, அருள்பணியாளர்கள் சாமிநாதர் கிருபானந்தன், C.G. ஜெயக்குமார் ஆகியோருக்கும், இதை வெளியிடும் மறைக்கல்வி நிலைய இயக்குனர் அருள்பணி. R.C.X. நேசராசா அவர்கட்கும் எனது உளம் நிறைந்த நன்றிகள்.

அருள்பணி. ஞா. பிலேந்திரன்,
அடைக்கல அன்னை ஆலயம்,
யாழ்ப்பாணம்.
17-2-99

முன்னுரை

உலகிலுள்ள மொழிகளில் அதிக எண்ணிக்கையிலான மொழிகளிலே மொழிபெயர்ப்புச் செய்யப்பட்ட இலக்கியம் என்ற பெருமை விவிலியத்திற்கு உண்டு. இதற்கு அடிப்படைக் காரணம் விவிலியம் இறைவனின் வார்த்தை என்பதாகும். விவிலியத்தின் வழியாக இன்றும் இறைவன் மனிதனுடன் பேசி (உறவாடி) மனிதனை அவனது வாழ்வின் இன்ப துன்ப நிலைக்கேற்ப வழி நடத்துகின்றார்.

கிறிஸ்துவின் காலத்திற்கு முன்பே விவிலியம் எபிரேய மொழியிலிருந்து, கிரேக்கத்திற்கு மொழிபெயர்ப்புச் செய்யப்பட்டுள்ளது. இதை "எழுபதின்மர்" மொழிபெயர்ப்புச் செய்த காரணத்தினால், இது "செப்துவஜிந்தா" என அழைக்கப்பட்டது. புதிய ஏற்பாட்டு ஆசிரியர்களும் "செப்துவஜிந்தா" மொழிபெயர்ப்பிலிருந்து மேற்கோள்கள் காட்டுகின்றனர். இவ்வாறு விவிலியத்தின் மொழிபெயர்ப்புகள் இலத்தின், கோப்திய, சிரிய, அர்மேனிய, காத்திய, ஜோர்ஜிய மொழிகளில் தொடக்கக் காலங்களிலிருந்தே மொழிபெயர்ப்புச் செய்யப்பட்டிருக்கின்றன.

அ) தமிழ் விவிலிய மொழிபெயர்ப்பின் வரலாறு

இந்திய, இலங்கை மொழிகளில் தமிழ் மொழியிலேயே அதிக எண்ணிக்கையிலான விவிலிய மொழிபெயர்ப்புகள் இடம் பெற்றுள்ளன. இந்த வகையில் 26ம் நாள், நவம்பர் திங்கள், 1995ம் ஆண்டு தென் இந்தியாவில் மதுரையில் வெளியிடப்பட்ட "திருவிவிலியம்" அல்லது "பொதுவிவிலியம்" தமிழ் மொழியில் இடம் பெற்ற 24ஆம் மொழிபெயர்ப்பாகும். இதற்கு முன்பு இடம் பெற்ற விவிலிய மொழிபெயர்ப்புக்கள் கத்தோலிக்க திருச்சபையினாலும், சீர்திருத்த சபைகளினாலும் தனித்தனியே மேற் கொள்ளப்பட்ட முயற்சிகளாகும்.

1) தமிழ் விவிலிய மொழிபெயர்ப்பில் கத்தோலிக்க திருச்சபையின் பங்களிப்பு

16ம் நூற்றாண்டின் நடுக்கூற்றில் அதாவது 1554 இல் போத்துக்கால் நாட்டு மறைப்பணியாளர்கள் (பிரான்சிஸ்கன் சபையினரா அல்லது இயேசு சபையினரா என்பது பற்றித் தெளிவாகக் கூற முடியாது உள்ளது.) Cartilha "காட்டிலா" (திருமறைக்குறிப்பிடம்) என்னும் நூலை வெளியிட்டனர். இதில் எட்டுப் பேறுகள், பரலோக மந்திரம், அருள்நிறை மந்திரம் ஆகிய அடிப்படைச் செபங்கள் காணப்

பட்டன. இது போத்துக்கேய எழுத்தில் தமிழ் ஒலிபெயர்ப்போடும் மொழிபெயர்ப்போடும், லிஸ்பனில் அச்சிடப்பட்டது.

இரண்டாவது முயற்சியாக, இயேசு சபைத் தொண்டர்கள் ஞாயிறு வழிபாட்டு நற்செய்திப் பகுதிகளையும், மத்தேயு, யோவான் நற்செய்திப் பகுதிகளையும், வெளியிட்டனர்.அத்துடன் பழைய, புதிய ஏற்பாட்டு முக்கிய சில விடயங்களையும் வினா - விடை வடிவத்தில் சல்லாபம் என்னும் பெயரில் வெளியிட்டனர். சீகன் பால்கு ஐயரின் மடல்களிலிருந்து மேற்கூறப்பட்ட விடயங்களுக்கான ஆதாரங்களைப் பெறக்கூடியதாயுள்ளது.

இத்துறையில் மூன்றாவதாகக் குறிப்பிடப்படுவது இயேசு சபை மறைப்பணியாளர் கென்றிக் கென்றிக்கஸ் அவர்களது ஆக்கங்களாகும். இவற்றில் 1578 இல் வெளியிடப்பட்ட "தம்பிரான் வணக்கம்" முக்கிய செபங்களை உள்ளடக்கியது. 1579 இல் வெளியிடப்பட்ட "கிரித்தியானி வணக்கம்", வினா-விடை வடிவத்தில் தம்பிரான் வணக்கத்திற்கு விளக்கமாக அமைந்தது. 1586 இல் வெளியிடப்பட்ட "Flos Sanctorum" அடியார் வரலாறு என்னும் நூல் கத்தோலிக்க விழாக்களுக்கு ஏற்ற பல திருவுரைகளைக் கொண்டது.

விவிலிய மொழிபெயர்ப்பில் தியான சம்பிரதாய சபையைச் சார்ந்த யாக்கோமே கொன்சால்வெஸின் பங்களிப்பு இன்று வரை அதிகம் அறியப்படவில்லை. யாக்கோமே கொன்சால்வெஸ் அடிகள் 1725ஆம் ஆண்டு விவிலியத்தை தேவ அருள் வேதபுராணம் என்னும் பெயரில் "புராண்சிம காண்டம்", "பசிம காண்டம்" என இரு பிரிவுகளாக எழுதினார். 1736இல் "சத்திய வேதாகம சங்சேபம்" என்னும் பெயரில் வினா - விடை வடிவத்தில் தேவ அருள் வேத புராணத்தின் உள்ளடக்கத்தைக் கையெழுத்துப்பிரதியாக வெளியிட்டார். 1728 இல் ஞாயிறு தினங்களிலும் திருவிழாநாட்களிலும் வாசிக்கப்படும் நற்செய்தி வாசகங்களையும், அவற்றிற்கான விளக்கங்களையும் கையெழுத்துப் பிரதியாக வெளியிட்டார்.

1857 இல் பாரீஸ் அன்னிய வேத போதக சபையினர், புதிய ஏற்பாட்டை எரோணிமுசு செய்த இலத்தீன் வுல்காத்தாவிலிருந்து மொழி பெயர்த்தனர். இது தமிழ் நாட்டின் வட பகுதியில் வழங்கியது. தொடர்ந்து திரிங்கால் என்னும் இயேசு சபை மறைப்பணியாளன் புதிய ஏற்பாட்டை வுல்காத்தாவிலிருந்து மொழிபெயர்ப்புச் செய்தார். இது தமிழ் நாட்டின் தென்பகுதியில் வழங்கியது. இதன் முதலாம் பதிப்பு 1891 இலும், 2ம் பதிப்பு 1896 இலும் வெளியிடப்பட்டன.

பொத்தேரோ குழுவினர் இலத்தீன் வுல்காத்தாவிலிருந்து பழைய ஏற்பாட்டு நூல்களை 1904 ஆம் ஆண்டு வெளியிட்டனர். தொடர்ந்து தமிழக கத்தோலிக்க ஆயர் பேரவையின் மொழி பெயர்ப்

புக்குழு எளிய, இனிய இலக்கியத்தமிழ் நடையில், கிரேக்கத்திலிருந்து 1970 ஆம் ஆண்டு புதிய ஏற்பாட்டு நூலை மொழிபெயர்ப்புச் செய்தது. பழைய ஏற்பாட்டுப் பகுதி, புதிய ஏற்பாட்டு மொழிபெயர்ப்புக்கு இணையாக 1904 இல் வெளியான புதுவைப்பதிப்பினின்று 1973 இல் திருத்தியமைக்கப்பட்டது. 1973 இல் பழைய ஏற்பாடும், புதிய ஏற்பாடும் இணைந்த பரிசுத்த வேதாகமம் வெளியிடப்பட்டது. 1975 இல் இந்திய வேதாகமச் சங்கம் வெளியிட்ட புதிய ஏற்பாடு கத்தோலிக்க புதிய ஏற்பாட்டை ஓட்டியதாக அமைந்தது. 1976 இல் சங்கீதங்களும் புதிய ஏற்பாட்டுடன் இணைந்து வெளியிடப்பட்டது.

2) விவிலிய மொழி பெயர்ப்பில் சீர்திருத்த சபையினர் பங்களிப்பு

கத்தோலிக்கரிலும் மேலாக சீர்திருத்த சபையினர் அதிக எண்ணிக்கையிலான மொழிபெயர்ப்புகளைச் செய்துள்ளனர். 1665 ஆம் ஆண்டு பிலிப் பல்தேயுஸ் என்னும் ஒல்லாந்த மறைப்பணியாளன் மத்தேயு நற்செய்தியை கையெழுத்துப் பிரதியாக வெளியிட்டார். தொடர்ந்து 1692இல் டிமே என்பவர் புதிய ஏற்பாட்டை கையெழுத்துப் பிரதியாக வெளியிட்டார்.

1714 இல் சீகன் பால்கு ஐயர் தென் இந்தியாவில் தரங்கம் பாடியில் "அஞ்சு வேத பொஷ்த்தகம்" என்னும் பெயரில் நான்கு நற் செய்திகள், அப்போஸ்தலர் பணி ஆகிய நூல்களை அச்சேற்றினார். இது தமிழ் மொழியில் முதல் அச்சேறிய விவிலிய மொழி பெயர்ப் பாகும். இது கத்தோலிக்க மொழிபெயர்ப்பையும், சொற்களையும் அடிப் படையாகக் கொண்டது என்பதற்கு சீகன் பால்கு எழுதியமடல்கள் சான்று பகர்கின்றன. மேலும் இது பரத மக்கள் வழக்குச் சொற் களையும், பேச்சு நடைச் சொற்களையும் கையாண்டு பாமர மக்களுக் காக எழுதப்பட்டது. இவரே புதிய ஏற்பாட்டின் ஏனைய பகுதிகளை 1715 இலும், பழைய ஏற்பாட்டின் ஆதி ஆகமம் முதல் ரூத்து வரையு மான நூல்களை 1719 இலும் வெளியிட்டார்.

தரங்கம்பாடியில் சூல்ச் என்பவரும் மொழி பெயர்ப்புத் துறை யில் குறிப்பிடத்தக்க பங்காற்றியுள்ளார். மேலும் கிராமர், வெர்சேலி யுஸ், டிமெல்லோ என்பவர்களும் மொழிபெயர்ப்புத் துறையில் பெரும் பங்காற்றியுள்ளனர். இவர்களைத் தொடர்ந்து தரங்கம்பாடியில், பப்ரீசி யுஸ் என்பவர் புதிய ஏற்பாட்டை 1772 இலும் பழைய ஏற்பாட்டின் ஆதி யாகமம் முதல் மலாக்கி ஆகமம் வரையிலான நூல்களை நான்கு பகுதிகளாக, 1777-1796 வரையிலுமான காலப்பகுதியில் வெளியிட்டார். இதுவே தமிழில் உரைநடையில் எழுதப்பட்ட முதல் பெரிய நூலாகும்

இது "பொன் திருப்புதல்" என்னும் சிறப்புப் பெயரில் வெளி யிடப்பட்டது. 1796 இல் பழைய ஏற்பாட்டு 39 நூல்களும், புதிய ஏற்பாட்டு 27 நூல்களும் முதன் முதலில் ஒரே நூல் வடிவில் வெளி

யிடப்பட்டது. இம்மொழி பெயர்ப்பு மூல பாடத்தை நெருங்கித் தழுவிய தாக அமைந்தாலும் நடை திருப்தியற்றதாகவே விளங்கியது. இரேனியுஸ் என்பவர் சென்னையில் பப்ரீசியுஸ் என்பவரின் மொழிபெயர்ப்பைத் திருத்தி நான்கு நற்செய்திகள், அப்போஸ்தலர் பணி ஆகிய நூல்களை 1827 இலும், புதிய ஏற்பாட்டை 1833 இலும் வெளியிட்டார். இது பப்ரீசியுஸ் கையாண்ட நடையைவிட சிறப்பானதாக விளங்கினாலும், மூலத்தை நெருங்கியதாக அமையவில்லை.

1850 இல் ஆறுமுக நாவலர் துணையுடன் யாழ்ப்பாணத்தில் பெர்சீவல் பாதிரியார் பழைய, புதிய ஏற்பாட்டு நூல்களை மொழி பெயர்ப்புச் செய்தார். இது இந்து சமயச் சொற்களைக் கையாண்டு யாழ்ப்பாணத்தமிழ் நடையில் அமைந்திருந்தது. "பரீட்சைத் திருப்புதல்" என்னும் சிறப்புப் பெயருடன் இது வெளியிடப்பட்டது. எனினும் தென் இந்தியாவில் இது ஏற்கப்படவில்லை.

முன்பு செய்யப்பட்ட மொழிபெயர்ப்புகளில் காணப்பட்ட குறைகள் நீங்கிய ஒரு மொழி பெயர்ப்பின் தேவை உணரப்பட்டது. இதனால் கென்றி பவர் என்பவர் தலைமையில் புதிய குழு நியமிக்கப்பட்டது. இதில் பப்ரீசியுஸ் என்பவரின் மொழி பெயர்ப்பையே நெருக்கமாகப் பின்பற்றி மொழிபெயர்ப்புச் செய்வது என்று முடிவு எடுக்கப்பட்டது. இம் மொழிபெயர்ப்பின் புதிய ஏற்பாடு 1864 இலும், பழைய ஏற்பாடு 1868 இலும் செய்யப்பட்டது. சத்திய வேதம் என்னும் சிறப்புப் பெயரில் பழைய, புதிய ஏற்பாடுகள் இணைந்த வெளியீடு எளிய கிறிஸ்தவத் தமிழில் 1871 இல் வெளியிடப்பட்டது. ஐக்கிய திருப்புதல் என்பது இன்றுவரை இம்மொழி பெயர்ப்புக்கு வழங்கப்பட்டுவரும் சிறப்புப் பெயராகும்.

இம்மொழி பெயர்ப்பு ஏனைய சபையினரின் ஒத்துழைப்புடன் செய்யப்பட்டது. பல சபைகளையும் திருப்திப்படுத்தியது. எல்லாச் சபையினரும் ஏற்றுக்கொள்ள முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. மொழி பெயர்ப்புப்பற்றி ஏனையோர் முன்வைத்த கருத்துக்கள் வரவேற்கப் பட்டன. இதனால் இன்று வரையும் சீர்திருத்தச் சபைகள் பலவற்றாலும் பயன்படுத்தப்படுகின்ற மொழிபெயர்ப்பாக விளங்குகின்றது.

மேற்குறிப்பிட்ட வரலாற்றுப் பின்னணியில் சில தெளிவான முடிவுகளை முன்வைக்கலாம்.

1. கிறிஸ்தவப்பண்பாட்டு மயமாக்கலின் ஒரு பரிமாணம் இலக்கியப் பண்பாட்டு மயமாக்கலாகும். தமிழ்க் கிறிஸ்தவ இலக்கியத்தின் தந்தையர்கள் கென்றிக்கென்றிக்கஸ், றொபேட் டி நொபிலி, சீகன் பால்கு என்பவர்களின் ஆரம்பகாலக் கடினமான பணிகள் பாராட்டுக்குரியவை.

2. 1970 இற்கு முன்பு செய்யப்பட்ட மொழிபெயர்ப்புக்களில் எல்லாம் வடமொழிச் சொற்பிரயோகம் அதிகம் பயன்படுத்தப்பட்டதாகவே காணப்படுகின்றது. இது மணிப்பிரவாள நடை என்றும் அழைக்கப்பட்டது.

3. ஐரோப்பிய கிறிஸ்தவ மதப் பணியாளரின் வருகைக்குப் பின்பே தமிழ் உரைநடை, வளர்ச்சியும் அதிகப்பயன்பாடும் பெற்றது.

4. ஒவ்வொரு மொழிபெயர்ப்பும் அதற்கு முன்பு இடம் பெற்ற மொழி பெயர்ப்பைவிட ஏதோ ஒரு நிலையில் வளர்ச்சி பெற்றதாகவே காணப்பட்டது.

ஆ) திருவிவிலிய பொது மொழிபெயர்ப்புக்கான முன் ஆயத்தங்கள்

தமிழ் மொழியில் திருவிவிலியத்தின் பல மொழி பெயர்ப்புகள் செய்யப்பட்டமை எமக்குப் பெருமையளிக்கும் விடயமாக அமைகின்றது. ஆயினும் காலப்போக்கில் ஒற்றுமையின் ஊற்றாகிய கடவுளின் வார்த்தை-விவிலியம் கிறிஸ்தவர்களைப் பிரிக்கும் கருவியாக மாறியது. கத்தோலிக்கர் ஏனைய சபையினர் மொழி பெயர்ப்பைப் படிப்பதும், ஏனைய சபையினர் கத்தோலிக்கர் மொழிபெயர்ப்பைப் படிப்பதும் குற்றமாகக் கருதப்பட்டது. மேலை நாடுகளில் ஆரம்பிக்கப்பட்ட பிரிவினை உணர்வு நம்மீதும் திணிக்கப்பட்டது.

ஒல்லாந்தர் இலங்கையை ஆண்டகாலப்பகுதியில் கத்தோலிக்கருக்கும் ஒல்லாந்த சீர்திருத்தவாத சபையினருக்கும் மத்தியில் எமது நாட்டில் நிலவிய பகைமை உணர்வு பழிவாங்கும் போக்கு நீண்ட காலங்களாக உள்ளத்தினின்று நீங்காத பல மனவடுக்களை ஏற்படுத்தியுள்ளன.

உண்மை நிலை உணர்ந்த பல கிறிஸ்தவர்கள்மத்தியில் இறைவார்த்தை கிறிஸ்தவர்களின் ஒற்றுமையின் கருவியாக மாற வேண்டும் என்ற நிலைப்பாடு படிப்படியாக உறுதிபெற்று மேலோங்கியது. இதனால் கிறிஸ்தவ சபைகளுக்கிடையே முன்பு இருந்த பகைமை உணர்வு மறைந்து புரிந்துணர்வு வளர்ந்து உறவுகள் ஆழம் பெற்று கூடிச்செபிப்பது சமூகப் பணிகளில் இணைந்து செயற்படுவது போன்ற செயற்பாடுகள் அதிகரித்துக்கொண்டு வருகின்றன. ஒரு காலத்தில் பிரிவின் கருவியாக விளங்கிய இறைவார்த்தை ஒற்றுமையின் கருவியாக மாற வேண்டும் என்னும் கருத்து பல கிறிஸ்தவர்கள் மத்தியில் ஆழமாகப் பதிந்து உறுதி பெற்றது. கிறிஸ்தவ சபைகள் மத்தியில் காணப்பட்ட இந்த உறவுச் சிக்கலை உணர்ந்த இரண்டாம் வத்திக்கான் சங்கமும் இதற்கான தீர்வின் ஒரு வழியை முன்வைத்தது.

சூழ்நிலைப் பொருத்தமும், திருச்சபையின் அதிகாரிகளின் ஒப்புதலும் இருக்குமாயின் நம் பிரிந்த சகோதரர்களின் ஒத்துழைப்போடு, விவிலிய மொழிபெயர்ப்புகள் செய்யப்படும் போது எல்லாக் கிறிஸ்தவர்களும் அதைப் பயன்படுத்த இயலும் எனக் கூறியது. (இறைவெளிப்பாடு 22). இப்பரிந்துரையின் பின்புலத்தில் 1966 இல் கத்தோலிக்கரின் கிறிஸ்தவ ஒன்றிப்புச் செயலகமும், பிற சபையினரின் விவிலிய சங்கங்களின் இணையமும் கூட்டாக பொது மொழிபெயர்ப்புக்கு வழிகாட்டும் விதி களை வெளியிட்டன.

அனைத்து கிறிஸ்தவ சபைகளின் கூட்டு முயற்சியினால் வெளியிடப்பட்ட பொது மொழி பெயர்ப்புக்கு வழிகாட்டும் விதிகள் உலகெங்கும் பல நூற்றுக்கணக்கான மொழிகளில் பொது மொழி பெயர்ப்புக்கள் வெளிவர வழிவகுத்தன. மேலும் 200 இற்கும் அதிக மான மொழிகளில் இப்பணி நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. தமிழில் பொது மொழிபெயர்ப்பின் ஆரம்ப முயற்சியாக 1972 இல் கத்தோலிக்க திருச்சபையின் பிரதிநிதிகளும், (பேராயர் R. அருளப்பா, அருட்கலாநிதி லெக்ராண்ட், அருட்கலாநிதி D. S. அமலோற்பவதாஸ்), பிறசபைகளின் பிரதி நிதிகளும் (பேராயர் L. நியூபிகின், முனைவர். A. E. இன்பநாதன். வண. அரங்காடன்) உரையாடலை ஆரம்பித்து 1973 இல் பொதுத் தமிழ் பழைய ஏற்பாட்டை மொழி பெயர்க்கும் பணியை ஆரம்பித்தனர்.

1974இல் பழைய ஏற்பாட்டுப் பொது மொழிபெயர்ப்புக் குழுவின் தொடர்பாளர்களாக அருட்திரு. R. J. ராசா (கத்தோலிக்க திருச்சபை) அவர்களும், வண. ராஜரீகம் (லாதரன் திருச்சபை) அவர்களும் தொடர் பாளர்களாக நியமிக்கப்பட்டனர். அருட்திரு. மிக்கேல் இருதயம் (கத்தோலிக்க திருச்சபை) மொழிபெயர்ப்புச் செய்த ரூத்து என்னும் நூல் 1975இல் வெளியிடப்பட்டது. இதே ஆண்டில் யோனாவும், 1976 இல் நீதி மொழிகளும் வெளியிடப்பட்டன. 1987இல் பழைய ஏற்பாட்டுப் பொது மொழிபெயர்ப்பு ஒருங்கிணைப்பாளர்களாக அருட்திரு. மிக்கேல் இருதயமும் (க.தி.), வண. ஜோன்ஸ்முத்து நாயகமும் பொறுப்பேற்றனர். தானியேல், 12 இறைவாக்கினர், திருவுரையாளர் ஆகிய நூல்கள் 1981 இல் வெளியிடப்பட்டன.

தமிழக ஆயர் பேரவை 1984இல் பழைய ஏற்பாட்டு பொது மொழிபெயர்ப்புப் பணிக்கு ஒப்புதல் அளித்தது. இதனால் பேராயர் ம. ஆரோக்கியசாமி அவர்கள் தலைவராகவும், அருட்திரு. ம. மரிய தாசன் அவர்கள் செயலராகவும் பொறுப்பேற்றனர். இதன் பின்பு மொழி பெயர்ப்புப்பணி மிக வேகமாகச் செயற்பட்டது. இணைத்திருமுறை நூல் களை வெளியிடும் பணிக்கு ஒரு குழுவும், இணைப்பாளராக அருட்திரு. J. சூசை மாணிக்கம் அவர்களும் நியமிக்கப்பட்டனர். 1988 இல் தமி ழக ஆயர் பேரவை புதிய ஏற்பாட்டு பொது மொழியாக்கத்திற்கு ஒப்பு தல் அளித்தது. அருட்திரு. F. ஏரொணிமுசு (கத்தோலிக்க திருச்சபை)

வண. ஜெ. ஜெயக்குமார் (மெதடிஸ் திருச்சபை) ஆகியோர் புதிய ஏற்பாட்டு குழுவின் ஒருங்கிணைப்பாளராகப் பொறுப்பேற்றனர்.

பொது விவிலியம் 38 விவிலிய அறிஞர்கள், 50இற்கும் அதிகமான தமிழ் அறிஞர்கள், 23 நீண்ட ஆண்டுகள் மேற்கொண்ட கடின உழைப்பின் கூட்டு முயற்சியின் கனியாகும். ஒவ்வொரு விவிலிய நூலையும் விவிலிய அறிஞர் ஒருவர் மூலமொழியிலிருந்து மொழி பெயர்ப்புச் செய்தார். மொழி பெயர்ப்பை அதற்கான ஒருங்கிணைப்புக் குழு ஆய்வு செய்து வேண்டிய மாற்றங்களைச் செய்தது. பின்பு மொழி பெயர்ப்பின் பாடம் (Text) தமிழ் அறிஞர்களிற்கு அனுப்பப்பட்டன. இவர்களின் பரிந்துரைகள் தேவையின் போது ஏற்கப்பட்டு மாற்றங்கள் செய்யப்பட்டன.

அனைத்து ஆயர்கள், ஏனைய திருச்சபைத் தலைவர்கள், ஒருங்கிணைப்பாளர்கள், விவிலிய அறிஞர்கள், மொழியியல் அறிஞர்கள் ஆகிய அனைவரையும் உள்ளடக்கியதே மேல்மட்டக் குழுவாகும். முக்கிய முடிவுகள், சிக்கலான முடிவுகள் மேல்மட்டக் குழுவினால் எடுக்கப்பட்டது. கலைச்சொற்கள், மரியாதைப்பன்மை, இருபாலாருக்கும் பொருந்தப் பேசுதல், சிக்கலான மொழிபெயர்ப்புக்களுக்கு விளக்கம் என்பன மேல்மட்டக் குழுவினால் செய்யப்பட்ட சில பணிகளாகும்.

மொழிபெயர்ப்பின் ஆரம்பக்கட்டத்தில் இது மிகவும் கடினமான பணியாகவே தென்பட்டதாக பொதுவாக எல்லா மொழி பெயர்ப்பாளரும் கூறியுள்ளனர். மேலும் பொது மொழி பெயர்ப்பு என்ற நிலையில், அதன் பின்னணியில் தோன்றிய தடைகளும் நிறையவே ஆரம்ப கட்டங்களில் இருந்துள்ளன.

இ) மொழிபெயர்ப்புக் குழுவினர் எதிர்நோக்கிய சிக்கல்கள்

இறை அருளாலும், ஆவியின் வழிநடத்துதலினாலும், மொழி பெயர்ப்புப் பணியில் பங்களிப்புச் செய்த குழுவினரின் கடின உழைப்பினாலும் மிகவும் திருப்திகரமான தமிழ் மொழிபெயர்ப்பு எம் கைகளில் உள்ளது. எனினும் மொழிபெயர்ப்புச் செய்த குழுவினர் பல சிக்கல்களை எதிர்நோக்க வேண்டியிருந்தது. அவற்றுள் சிலவாகப் பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம்.

1. பொது விவிலியத்தில் எத்தனை நூல்கள் இடம் பெறவேண்டும் எனும் சிக்கல் - 39 அல்லது 46.
2. மூலபாடம் தொடர்பான சிக்கல்கள் -
3. பெயர்கள் தொடர்பான சிக்கல்கள் -

இவ்வாறன பல சிக்கல்கள் எதிர்நோக்கப்பட்டன

1) பொது விவிலியத்தில் எத்தனை நூல்கள் இடம் பெற வேண்டும்

புதிய ஏற்பாட்டு நூல்களைப் பொறுத்தவரை இச்சிக்கல் எழ வில்லை. கத்தோலிக்கரும், சீர்திருத்த சபையினரும் புதிய ஏற்பாட்டி லுள்ள 27 நூல்களையும் இறை ஏவுதல் பெற்று எழுதப்பட்ட நூல்க ளாக ஏற்றுக்கொள்கின்றனர். இவை திருமுறை நூல்கள் என்றும் அழைக்கப்படுகின்றன. பழைய ஏற்பாட்டுத் திருமுறையில் எத்தனை நூல்கள் என்னும் சிக்கலுக்கு கருத்து வேறுபாடு காணப்படுகின்றது. கத்தோலிக்கர் 46 நூல்களைப் பழைய ஏற்பாட்டுத் திருமுறை நூல் களாக ஏற்றுக்கொள்கின்றனர். ஆனால் சீர்திருத்த சபையினர் 39 நூல் களையே திருமுறை நூல்களாக ஏற்றுக்கொள்கின்றனர். இவ்வாறக சிக்கலுக்குட்பட்ட நூல்களாக யூதித்து, தோபித்து, சலமோனின் ஞானம், பாருக்கு, 1, 2 மக்கபேயர் ஆகிய நூல்களும் எஸ்தரின் கிரேக்கப் பகுதியும் தானியேலின் இணைப்புப் பகுதியும் கணிக்கப் படுகின்றன. பொது விவிலியத்தில் இணைத்திரு முறைநூல்கள் எனப் படுகின்றன. முன்பு சீர்திருத்த சபையினர் இந்நூல்களை தள்ளுபடி ஆகமம் என்று அழைத்தனர்.

இவ்வாறான சிக்கல் தோன்றுவதற்கான காரணம் என்ன? கத்தோலிக்கர் கிரேக்க மொழிபெயர்ப்பாகிய செப்துவாஜிந்தா என்னும் மொழிபெயர்ப்பை ஆதாரமாகக் கொண்டு அங்கீகாரம் பெற்ற நூல்கள் 46 என ஏற்றுக்கொண்டனர். சீர்திருத்த சபையினர் எபிரேயத் திருமுறை யில் அடங்கும் 39 நூல்களை மட்டும் திருமுறை நூல்களாக ஏற்றுக் கொண்டனர். பொது விவிலியத்தில் இணைத்திருமுறை நூல்கள் இணைக்கப்பட வேண்டுமா? அப்படி இணைப்பதாயின் எங்கு வைப்பது என்ற சிக்கல் எழுந்தது. பொது விவிலிய மொழிபெயர்ப்பு விதிகளின் படி முதலில் எபிரேயத் திருமுறை நூல்கள் (39) இணைத்திருமுறை நூல்கள் (07) புதிய ஏற்பாட்டு நூல்கள் 27 என்னும் ஒழுங்கில் அமைக்கப்பட்டு வெளியிடப்பட்டது.

2) பாடச்சிக்கல்கள்

பொது மொழிபெயர்ப்பிற்கு அடிப்படையாக மூன்று மூல பாடங்கள் அமைகின்றன.

1. எபிரேய, அரமேய மூலபாடம் :- Rudolph Kittel (ருடோல்ப் கிற்றல்) பதிப்பித்த வூர்ட்டம்பர்க் விவிலியச் சங்கத்தினரால் 1966 - 67 இல் வெளியிடப்பட்ட பிபிலியா எப்பிராயிக்கா. Biblia Hebraica Stuttgartensia.

இன்று விவிலிய மொழிபெயர்ப்பின் போது பல விதமான பாடச் சிக்கல்களை மொழிபெயர்ப்பாளர்கள் எதிர்நோக்க வேண்டியுள்ளது. இதற்கு ஆரம்பக் காலம் முதல் விவிலியப் பிரதிகள் எடுக்கப்படும் போது ஏற்பட்ட தவறுகளே மூல காரணமாக அமைகின்றன. விவிலியத்தின் ஆசிரியர்கள் எழுதிய எந்த நூலுக்கான மூலப் பிரதியும் எமக்கு இன்று வரை கிடைக்கவில்லை. இன்று எம்மிடம் உள்ளவை மூலப் பிரதிகளின் பிரதிகளே. மேலும் இவ்வாறு பிரதிகள் எடுக்கும்போது எழுத்துப் பிழைகள், சொற்பிழைகள், சொற்கள் தவறுதலாக விடப்படுதல், வசனங்கள் தவறுதலாக விடப்படுதல் போன்ற பிழைகள் ஏற்பட்டன.

மேலும் பிரதிகளின் உரிமையாளர்கள் தமக்குப்பயன்படுமாறு ஓரத்தில் எழுதிவைத்த குறிப்புகள் பின்பு பிரதி எடுத்தவர்களால் விவிலியப் பகுதிகளாகச் சேர்க்கப்பட்டன. மேலும் பிரதி எடுத்தவர்கள் பிழைகளாகக் கருதியவற்றைத் திருத்தினார்கள். தெளிவில்லாதவற்றைத் தெளிவாக்கியதோடு, இணையான பகுதிகளிலுள்ள சொற்களைச் சேர்த்தார்கள். மேற்குறிப்பிடப்பட்ட பல காரணங்களால் விவிலியப் பிரதிகளில் வேறுபாடுகள் தோன்றின. இவற்றைப் பாட பேதங்கள் என அழைப்பர்.

11. கிரேக்கத்திலுள்ள பழைய ஏற்பாட்டு நூல்களுக்கு மூல பாடம் :- Alfred Ralphs பதிப்பித்த அதே விவிலியச் சங்கத்தால் 1935இல் வெளியிடப்பட்ட "செப்துவாஜிந்தா".

111. புதிய ஏற்பாட்டு நூல்களுக்கு மூல பாடம் :- விவிலியச் சங்கங்களின் இணையத்தால் வெளியிடப்பட்ட கிரேக்க புதிய ஏற்பாட்டின் 3வது பதிப்பு. (இது கத்தோலிக்க சீர்திருத்த சபைகளின் கூட்டு முயற்சி வெளியீடு)

மேற்குறிப்பிட்ட மூன்று மூல பாடங்களும், பொது மொழி பெயர்ப்பு விதிமுறைகள் குறிப்பிடும் மூலமொழிப்பாடங்களேயாகும்.

பொது மொழிபெயர்ப்பை நெறிப்படுத்தப் பல விதிகள் இருந்தாலும் சில சிக்கல்கள் எழத்தான் செய்தன. சீர்திருத்த சபையினர் அதிகமாகப் பயன்படுத்தும் மொழிபெயர்ப்பில் காணப்படும் சில சொற்கள், அல்லது சொற்தொடர்கள் அல்லது வசனங்கள், மேற்குறிப்பிட்ட மூல பாடங்களிலும் ஆராய்ச்சியின் அடிப்படையில் வெளிவரும் ஆங்கில அல்லது பிற மொழி விவிலியங்களிலும், கத்தோலிக்கர் பயன்படுத்தும் தமிழ் மொழி பெயர்ப்பிலும் காணப்படுவதில்லை. இந்நிலை ஏற்படக் காரணம் என்ன?

சீர்திருத்த சபையினர் பயன்படுத்தும் மொழி பெயர்ப்புகள், ஏற்கப்பட்ட பாடத்தை (வுநஒவரள சுநஉநிவரள) மூல பாடமாகப் பயன்

படுத்தின. இந்த ஏற்கப்பட்ட கிரேக்க பாடம் சில முக்கியமற்ற படிகளை ஆதாரமாகக் கொண்டு தயாரிக்கப்பட்டது. இதனால் இவற்றில் பல குறைபாடுகள் காணப்பட்டன. விவிலிய ஆய்வு வளர்ச்சி பெற்ற இன்று, சீர்திருத்த சபையார் பயன்படுத்தும் ஏற்கப்பட்ட பாடத்தில் உள்ள இப்பகுதிகளை விவிலியப் பகுதிகளாகக் கருதுவதில்லை. ஆய்வின் அடிப்படையில் இவற்றை விவிலிய பாடத்துடன் சேர்க்காது விட்டுவிடலாம். ஆயினும் மக்கள் மனதில் ஆழமாகப் பதிந்த காரணத்தினால் இவை விவிலியப் பாடத்துடன் அடைப்புக் குறிக்குள் அல்லது அடிக் குறிப்பினுள் இடம் பெறுகின்றன.

எடுத்துக்காட்டாக-
மத் 6 : 13 - ஆட்சியும் வல்லமையும், மாட்சியும் என்றென்றும் உமக்கே ஆமென்.
மாற் 11 : 26 - நீங்கள் மன்னிக்காவிட்டால் உங்கள் விண்ணகத் தந்தையும் உங்கள் குற்றங்களை மன்னிக்கமாட்டார்.
லூக் 23 : 17 - விழாவின் போது அவர்களுக்கென ஒரு கைதியை விடுவிக்கவேண்டிய கட்டாயம் அவனுக்கு இருந்தது.

இந்த வசனங்களும் இதைப் போன்ற வேறு பல வசனங்களும் பொது மொழிபெயர்ப்பில் சதுர அடைப்புக்குறிக்குள் இடம்பெறுகின்றன.

3) பெயர்கள் பற்றிய சிக்கல்கள்

பெயர்கள் பற்றிய சிக்கல்களில் ஆட்களின் பெயர்கள், நூல்களின் பெயர்கள், இடங்களின் பெயர்கள் தொடர்பாகவே எழுந்துள்ளன. நூல்களின் பெயர்களிலே வடமொழிச் சாயல் அதிகம் கொண்ட பெயர்கள் தனித் தமிழ்ப் பெயர்களாக மாற்றம் பெற்றன.

எடுத்துக்காட்டாக-

ஆதியாகமம்	-	தொடக்கநூல்
யாத்திராகமம்	-	விடுதலைப் பயணம்
உப ஆகமம்	-	இணைச்சட்டம்
சங்கீதங்கள்	-	திருப்பாடல்
ஆட்கள், இடங்கள்	-	வேறுபட்ட உச்சரிப்பு

விவிலியத்தில் வரும் பெயர்களை கத்தோலிக்கரும், சீர்திருத்த சபையாரும் வெவ்வேறாக வழங்கி வந்துள்ளோம்.

கத்தோலிக்கர்	சீர்திருத்த சபையினர்
இஸ்ராயேல்	இஸ்ரவேல்
மோயீசன்	மோசே
சாம்சன்	சிம்சோன்
பாலாம்	பிலெயாம்
நாமான்	நாகமான்
இசையாஸ்	ஏசாயா
எரேமியாஸ்	எரேமியா
செப்போனியாஸ்	செப்போனியா

இந்த வேறுபாட்டிற்குக் கத்தோலிக்க, சீர்திருத்த சபைகளை எம் நாட்டில் பரப்பிய மேலைநாட்டு மறைப்பணியாளரே காரணம். கத்தோலிக்க மறை அறிவிப்பாளர்கள் இலத்தீன் மொழியின் தாக்கத்தால் மேற்குறிப்பிட்ட பெயர்களை ஒரு விதமாக வழங்கினர். சீர்திருத்த சபையைச்சார்ந்த மறைப்பணியாளர்கள் எபிரேய, கிரேக்க, ஆங்கில மொழிகளின் தாக்கத்தால் அதே பெயர்களை வேறு விதமாக வழங்கினர். இவ்வாறான பெயர் வேறுபாடுகள் இன்று வரை வேறுபாட்டின் சின்னமாக விளங்குகின்றது. பொது விவிலியத்தில் இவ்வேறுபாடுகள் களையப்பட்டு இருபகுதியினரும் ஏற்றுக்கொள்ளத்தக்க பெயர்கள் வழங்கப்பட்டுள்ளன. இவ்வேறுபாடுகளைக் களைவதற்கு இரண்டு விதிகள் கையாளப்பட்டன.

I) தற்காலப் புவியியல் பெயர்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டன.
II) மூலமொழி ஒலிக்கேற்ப அமையும் ஒலிபெயர்ப்புகள் ஏற்றுக் கொள்ளப்பட்டன.

புவியியற் பெயரின் அடிப்படையில் இஸ்ராயேல், இஸ்ரவேல் எனும் பெயர்கள் தவிர்க்கப்பட்டு இஸ்ரயேல் என்னும் பெயர் ஏற்றுக் கொள்ளப்பட்டது. மேலும் ஒலிபெயர்ப்பின் அடிப்படையில் மோசே, சிம்சோன், பிலெயாம், எசாயா ஆகிய பெயர்கள் பயன்படுத்தப்பட்டன.

பெயர்களை மொழி பெயர்த்தல்

மொழிபெயர்ப்பு விதியின்படி இடங்களின் பெயர்கள், ஆட்களின் பெயர்கள் ஒலிபெயர்ப்புச் செய்யப்பட வேண்டுமேயொழிய மொழி பெயர்ப்புச் செய்வது முறையன்று. கத்தோலிக்க திருச் சபையின் புதிய ஏற்பாட்டிலுள்ள சில பெயர்கள் மொழி பெயர்ப்புச் செய்யப்பட்டுள்ளன. எடுத்துக்காட்டு :-

இராயப்பர், பெலவேந்திரர், சின்னப்பர், முடியப்பர், அருளப்பர். இப்பெயர்கள் கத்தோலிக்கரின் உள்ளத்திலும், உணர்விலும் நீண்டகாலமாகப்பதிந்த பெயர்கள்.

ஆயினும் அறிவியல் நிலையான ஆய்விற்கும், வரலாற்று உண்மைகளுக்கும் உரிய இடம் அளித்து உண்மைகள் ஏற்கப்பட வேண்டும்.

பெயர்கள் மொழி பெயர்க்கும் மரபு தமிழ் மொழியில் மட்டுமே காணப்படுகின்றது. மிகச்சிறிய தொக்கை (ஐந்து) பெயர்கள் மட்டுமே விவிலியத்தில் மொழிபெயர்ப்புச் செய்யப்பட்டுள்ளன. இயேசு, மரியா போன்ற முக்கிய பெயர்கள் மொழிபெயர்ப்புச் செய்யப்படவில்லை. கத்தோலிக்க சபையிலும், தமிழ்க் கிறிஸ்தவ இலக்கியங்கள் படைக் கப்பட்ட ஆரம்பகாலத்தில் பெயர்கள் ஒலிபெயர்ப்பே செய்யப்பட்டன. Cartilha (1554), கென்றிக் கென்றிக்கஸ் எழுத்துக்கள் இதற்கு சிறந்த எடுத்துக்காட்டு (பேதுரு, பாவிலு). தத்துவ போதகரே (றொபேட் டீ நொபிலி) முதன்முதலில் இப் பெயர்களை மொழிபெயர்ப்புச் செய்தவர். இவ்வாறு பெயர்களை மொழிபெயர்ப்புச் செய்வதை இயேசு சபைத் தலைவர் தடைசெய்தார். ஆயினும் இயேசுசபைத் தலைவர், பெயர் களை மொழிபெயர்ப்புச் செய்வதைத் தடை செய்ததால் மீண்டும் பேதுரு, பாவிலு என்னும் பெயர்கள் வழக்கிலிருந்தன. மீண்டும் வீரமா முனிவர் தமது காலத்தில் பெயர்களை மொழிபெயர்ப்புச் செய்தார். திருவிவிலியத்தில் இப்பெயர்கள் பேதுரு, அந்திரேயா, பாவிலு, ஸ்தே வான், யோவான் என்றே வழங்கப்பட்டுள்ளன.

4) சில சிக்கலான சொற்களின் மொழிபெயர்ப்பு

அ) மரியா அருள் நிறைந்தவரா – அருள்மிகப்பெற்றவரா

லூக்.1 : 28 இல் வருகின்ற கிரேக்கச் சொல் "கெக்கரித்தோ மெனே" என்பது சீர் திருத்த சபையினர் பயன்படுத்தும் பவர் மொழி பெயர்ப்பில் அருள்பெற்றவளே என்றும் கத்தோலிக்க மொழிபெயர்ப்பில் "அருள்நிறைந்தவளே என்றும் மொழிபெயர்க்கப் பட்டுள்ளது. கத்தோ லிக்கமரபு, புனிதர் எரோணிமுசு செய்த வுல்காத்தா என்னும் இலத்தீன் மொழிபெயர்ப்பை அடிப்படையாகக் கொண்டது. அதன்படி(gratia plena) – அருள் நிறைந் தவள் என மொழி பெயர்ப்புச் செய்யப்பட்டது.

எனவே மரியா அருள் நிறைந்தவரா அல்லது அருள் பெற்றவரா என்னும் கேள்வி எழுகின்றது. நடைமுறையில் இது கத்தோலிக்கர் சீர்திருத்த சபையினர் மத்தியில் உணர்வு நிலையில் பிரச்சனைகள் தோன்ற இடமளிக்கலாம். ஆயினும் "கெக்கரித்தோமெனே" என்னும் சொல்லை விவிலிய ஆய்வு நிலையில் நோக்கும் போது அருள் நிறைந்தவர் என்பது மிகைப்படுத்தப்பட்ட சொல்லே. அருள் பெற்றவர் என்பது அச்சொல்லின் முழுத் தாக்கத்தையும் வெளிப்படுத்தப்பட வில்லை. எனவே இச்சொல் "அருள்மிகப்பெற்றவரே" என மொழி பெயர்ப்புச் செய்யப்பட்டுள்ளது.

ஆ) செம்மறி – ஆட்டுக்குட்டி.

யோவா 1 : 29 இல் அம்னோஸ் என்னும் சொல்லைக் கத்தோலிக்கர் செம்மறி என்றும் சீர்திருத்த சபையினர் ஆட்டுக்குட்டி என்றும் மொழிபெயர்த்து வந்துள்ளனர். பொது மொழிபெயர்ப்பில் அதிகம் பொருத்தமான ஆட்டுக்குட்டி என்னும் சொல்லே பயன்படுத்தப் படுகின்றது.

இ) வெறுத்தல் – மேலாகக்கருதல்

மிசெயோ என்னும் கிரேக்கச் சொல்லுக்கு வெறுத்தல் என்பது ஒருபொருள். எனினும் இச்சொல் பாடத்தில் வெவ்வேறு இடங்களிலும் தோன்றும்போது வேறுபொருளில் பயன்படுத்தப்பட்டுள்ளது. லூக்14 : 26 இல் கத்தோலிக்க மொழிபெயர்ப்பில் என் இடம் வருகின்றவன் தன் தாய், தந்தை, மனைவி. . . . . .ஏன் உயிரையும் வெறுக்காவிட்டால் என் சீடனாய் இருக்க முடியாது. பகைவனையும் அன்பு செய் என்று கூறிய கிறிஸ்து இரத்த உறவினரையும் வெறுக்கவேண்டும் என்று கூற முடியுமா? எனவே பொது மொழிபெயர்ப்பில் லூக் 16 : 26, "என்னிடம் வருபவர் தம் தாய், தந்தை. . . . . ஏன் தன் உயிரையும், என்னை விட மேலாகக் கருதினால் அவர் என் சீடனாய் இருக்க முடியாது.

திசைச்சொல், வடசொல் தவிர்த்தல்

கத்தோலிக்கர் மொழிபெயர்ப்பில் ஏற்கனவே பல திசைச் சொற்கள் மாற்றப்பட்டு இணையான தமிழ்ச் சொற்கள் பயன்படுத்தப்படுகின்றன. கொம்பிசம்ஒப்புரவு, இஸ்பிரித்துசாந்து தூய ஆவி என சில சொற்களைக் குறிப்பிடலாம். அப்போஸ்தலர் என்னும் சொல் அப்போஸ்தலோஸ் என்னும் கிரேக்கச் சொல்லின் தமிழ் வடிவமாகும். அப்போஸ்தலோஸ் என்பதன் பொருள் தூது அனுப்புதல் என்பதாகும். எனவே இந்த அடிப்படையில் இச் சொல் திருத்தூதர் ஆகின்றது.

விசுவாசம் – நம்பிக்கை.

விசுவாசம் என்பது வட சொல். ஆனால் கிறிஸ்தவ உணர்வுகளுடன் ஆரம்பமொழிபெயர்ப்பு 1554 இல் இடம்பெற்ற Cartilha காலத்திலிருந்து கிறிஸ்தவத்துடன் ஒன்றித்துவிட்ட சொல் ஆகும். வட சொற்களை அகற்றி இணையான தமிழ்ச் சொற்களைப் பயன்படுத்துவது பொது மொழிபெயர்ப்பில் ஒரு இலக்காக உள்ளது. விசுவாசம் என்பதற்கு இணையான தமிழ்ச் சொல் நம்பிக்கை என்பதாகும். எனவே விசுவாசம் என்பதற்குப் பதிலாக நம்பிக்கை என்னும் சொல்லே பொது மொழிபெயர்ப்பில் பயன்படுத்தப்படுகின்றது. ஆரம்பத்தில் கடினமாகத் தென்பட்டாலும் கால ஓட்டத்தில் நம்பிக்கை என்னும் சொல், முன்பு

விசுவாசம் என்னும் சொல் உள்ளடக்கிய பொருளையும் ஆழத்தையும் அடைந்து விடும். நம்பிக்கை என்பது "எதிர் நோக்கு" Hope எனப் பயன்படுத்தப்படுகின்றது.

ஈ) பொது மொழி பெயர்ப்பின் சில சிறப்புப் பண்புகள்

கிறிஸ்தவ சபைகளின் ஒன்றிப்பை முதன்மை நோக்காகக் கொண்டு ஆக்கப்பட்ட பொதுவிவிலியம் . வேறும் பல சிறந்த பண்பு களையும் தன்னகத்தே கொண்டுள்ளது. இது இனிய எளிய தமிழ்நடையில் அமைந்தது தெளிபொருள் .மொழிபெயர்ப்பைக் கொண்டுள்ளது. மரியாதைப்பன்மை, ஆண் - பெண் சமத்துவம் என்பவற்றுடன் மேலும் பல சிறப்புகளையும் தன்னகத்தே கொண்டுள்ளது.

1) இனிய எளிய தமிழ் நடை

பொது விவிலிய மொழி பெயர்ப்பு இனிய, எளிய, நேரடியான உரை நடைத்தமிழில் அமைந்துள்ளது. நடையில் எளிமை, கருத்தில் தெளிவு, சொற் சுருக்கம், பொருள் ஆழம், பொருத்தமான சொற்கள் அல்லது சொற் பதங்கள் கையாளப்பட்டுள்ளமை மேலும் மெருகூட்டும் பண்புகளாகும். மூல மொழிக் கருத்துப் பிறழாமல் பெறும்மொழிப் பண் பாட்டிற்கு ஏற்பவும் இங்கு செய்தி வழங்கப்படுகின்றது. இலக்கண வழு வற்ற வாக்கிய அமைப்புடன், புரிவதற்குக் கடினமான சொற்பதங்கள் தவிர்க்கப்பட்டு மொழிபெயர்ப்புச் செய்யப்பட்டுள்ளது.

மூல மொழியில் கவிதை நடையிலுள்ள பகுதிகள் கவிதை வடிவத்திலேயே தமிழாக்கம் செய்யப்பட்டுள்ளன. தமிழ் மரபைப் பேணும் வகையில் எபிரேயச் சொல் வரிசை மாற்றப்பட்டு அதாவது தந்தை. தாயை மதித்து நட என்பது தாய் தந்தையை மதித்து நட என மாற்றம் பெற்றுள்ளது. வட்டார அல்லது பிரதேசத்துவ சொல் வழக்குகள் கையாளப்பட்டுள்ளன. 1864-68 ஆம் ஆண்டுகளில் செய்யப் பெற்ற பவர் மொழி பெயர்ப்பிலுள்ள பல வடசொற்கள், திசைச் சொற்கள் தனித் தமிழ்ச் சொற்களாக மாற்றப்பட்டுள்ளதை, 1970 இல் செய்யப்பெற்ற கத்தோலிக்க மொழிபெயர்ப்பில் காணக்கூடியதாயுள்ளது. மேலும் கத்தோலிக்க மொழிபெயர்ப்பில் 1970இல் பயன்படுத்தப் பட்டுள்ள பல வடசொற்கள் தவிர்க்கப்பட்டு பொது விவிலியத்தில் தனித்தமிழ்ச் சொற் கள் பயன்படுத்தப்பட்டுள்ளன.

சில எடுத்துக்காட்டுகள் :- இறை வேண்டுதல் (செபம்) தொழுகைக் கூடம் (செபக் கூடம்) அமைதி (சமாதானம்) நேர்மையாளர் (நீதிமான்) திருப்பாடல் (சங்கீதம்)

பொது விவிலியத்தில் இனிய தமிழ்ப் பதங்கள் கையாளப்படுகின்றன. சில எடுத்துக்காட்டுகள் :- நிலக்கிழார் (வீட்டுத் தலைவன்) தொழுகை மேடு (பீடம்) பரத்தமை (கெட்ட நடத்தை) தீவனத்தொட்டி (முன்னிட்டி).

எனினும் வடசொற்கள் அனைத்தும் தவிர்க்கப்படவில்லை. சரியான தமிழ்ச்சொற்கள் வழக்கில் இல்லாத விடத்து வடசொற்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. சில எடுத்துக்காட்டுகள் :- விருத்தசேதனம், விபச்சாரம், பாவம், நரகம்.


ஓட்டு மொத்தமாக நோக்கின், பொது விவிலியத்தில் காணப்படும் தமிழ் உரைநடை பற்றிக்குறிப்பிடாத எந்தத் தமிழ் உரை நடை வரலாறும் முழுமை பெறாதது என்று கூறி இதன் உரைநடையை உயர்வாக மதிப்பிடுகின்றார் முனைவர் அந்தோனி குரூஸ்.

2) தெளி பொருள் மொழிபெயர்ப்பு.

சொல்லுக்குச் சொல் மொழி பெயர்ப்பது சொற்பெயர்ப்பே, வசனத்திற்கு வசனம் மொழிபெயர்ப்பதும் நிறைவான மொழிபெயர்ப்பாய் இருக்கமுடியாது. ஒரு கருத்துப்பகுதியில் உள்ள செய்தியை வேறொரு மொழியின் மரபுக்கு ஏற்ப வழங்குவதே தெளி பொருள் மொழி பெயர்ப்பாகும்.

எபிரேயச்சொல் முறைகளையும் (Semitisms) தனிமரபுச் சொற்களையும் (Idioms) சொல்லுக்குச் சொல் மொழிபெயர்க்கும் போது கருத்துத் தெளிவு ஏற்பட வாய்ப்பில்லை. எனவே இவை கூறும் பொருளைப் புரிந்து பொருத்தமான சொற்களில் மொழிபெயர்க்க வேண்டும்.

இளமை முதல் கேட்டும், படித்தும் பழகிவிட்ட காரணத்தினால் கிறிஸ்தவர்களுக்கு மட்டும் புரியக்கூடிய பகுதிகள் யாவருக்கும் புரியும் வகையில் பொது விவிலியத்தில் மாற்றி அமைக்கப்பட்டுள்ளன.



மாற்கு 9:50
- ப.மொ – உங்களுக்குள்ளே உப்புடைய வராய் இருங்கள்
- க. மொ – உங்களுக்குள் உப்பு இருக்கட்டும்
- டை.ா.மொ – நீங்கள் உப்பின்தன்மை கொண்டிருங்கள்

லூக்கா 14:26
- ப.மொ. – தகப்பனையும் தாயையும் . . . தன் ஜீவனையும் வெறுக்கா விட்டால்.
- க.மொ. – தந்தை, தாய் ஏன் தன் உயிரையுமே வெறுக்காவிட்டால்.
- பொ.மொ. – தாய், தந்தை. . . . ஏன் தன் உயிரையுமே என்னைவிட மேலாகக் கருதினால்.


லூக்கா 13: 1
- ப.மொ. – பிலாத்து சில கலிலேயருடைய ரத்தத்தைஅவர்களுடைய பலிகளோடே கலந்தான்
- க.மொ. – பிலாத்து கலிலேயரின் இரத்தத்தை அவர்களுடைய பலியோடு கலந்தான்.
- பொ.மொ. – பலி செலுத்திக்கொண்டிருந்த கலிலேயரைப் பிலாத்து கொன்றான்.

3) 6 ம் வேற்றுமைத் தொகைப் பொருள் தெளிவு. (Genitive)


6 ம் வேற்றுமைத் தொகை பயன்படுத்தும்போது பொருள் மயக்கம் ஏற்பட இடமுண்டு.

6 ம் வேற்றுமை உடைமைப் பொருளைக் குறிப்பதாகும். சில எடுத்துக்காட்டுக்கள் :-


Love of God



Gift of the Holy Spirit



Light of the world



பொது மொழி பெயர்ப்பில் அந்தந்த இடத்திற்கேற்ற தெளிவான பொருள் தரப்படுகின்றது. மேலும் சில சொற்கள் சேர்ப்பதன் மூலம் பொருள் தெளிவுபடுத்தப்படுகின்றது.

எடுத்துக்காட்டு –

வாழ்வின் ஒளி	-	வாழ்விற்கு வழிகாட்டும் ஒளி.
நம்பிக்கையின் கடவுள்	-	நம்பிக்கை தரும் கடவுள்.
கடவுளின் மீட்பு	-	கடவுள் தரும் மீட்பு.

4) உருவகங்களுக்குப் பொருட் தெளிவு

ஒரு மொழியின் உருவகத்தை மற்றொரு மொழியில்பெயர்ப்பது இலகுவான விடயமல்ல. ஒரு உருவகம் மற்றொரு மொழியிலும் பொருள் கொடுப்பதாய் இருந்தால் அதனை அப்படியே மொழிபெயர்க்கலாம். எடுத்துக்காட்டு - ஒளி, வழி.

- சில உருவகங்களை உவமைகளாக்கலாம்.
  எடுத்துக்காட்டு :- வழியோரம் விழுந்த விதைகளுக்கு ஒப்பானவர்கள் இவர்களே. மாற். 4 : 15

- சில வேளைகளில் உருவகத்தோடு கருத்தையும் இணைத்துப் பொருளை வெளிப்படுத்தலாம்.
  எடுத்துக்காட்டு :- மத். 26 : 42 துன்பக் கிண்ணம்.

மூல மொழி உருவகத்திற்குப் பதிலாக பெறு மொழியில் இயல்பான புதிய உருவகம் பயன்படுத்தலாம்.
எடுத்துக்காட்டு :- அரசன் முகம் கறுத்து, நெஞ்சம்கலங்கி, தொடைநடுக்கமுற்றான். தானி. 5 : 6.

- பொது மொழி பெயர்ப்பில் சில இடங்களில் உருவகங்களைத் தவிர்த்து அவற்றின் பொருளே தரப்படுகின்றது.

எடுத்துக்காட்டு :-

Sons of peace	–	அமைதியை விரும்புவோர். லூக். 10 : 6.
Sons of light	–	ஒளியைச் சார்ந்தவர்கள். யோவான் 12 : 36.
Sons of the kingdom	–	அரசுக்கு உரியோர். மத். 8 : 12.
Sons of the evil one	–	தீயோனைச் சேர்ந்தவர்கள் மத். 13 : 38.
Sons of the thunder	–	இடியைப் போன்றோர். மாற். 3 : 17.
Your sons	–	உங்களைச்சார்ந்தவர்கள். லூக். 11 : 9.

5) மரியாதைப் பன்மை.

தமிழ் மொழியின் சிறப்புப் பண்புகளில் ஒன்று மரியாதைப் பன்மையைக் கொண்டிருப்பதாகும். மரியாதைப்பன்மையாகிய சிறப்புப் பண்பு பொது விவிலியத்தையும் அணி செய்கின்றது. இதற்கு முன்பு செய்யப்பட்ட மொழிபெயர்ப்புகளில் மரியாதைப் பன்மை முக்கியம் பெறவில்லை. மனித மாண்பின் மேன்மையும், பெண்ணுரிமைப் பார்வையும் உயர்வாக நோக்கப்படும் இன்றைய காலத்திலே இக்கருத்து முக்கியம் பெறுகின்றது.

பொதுவாகத் தமிழ்ச் சமுதாயத்தில் என்ன அடிப்படையிலே மரியாதைப்பன்மை வழங்கப்பட்டது அல்லது மறுக்கப்பட்டது என்பதை நாம் ஓரளவிற்கு ஊகித்து அறிந்துகொள்ளக் கூடியதாய் உள்ளது. தமிழ்ச் சமூகத்தில் பணம், படிப்பு, பதவி, செல்வாக்கு, உயர்வு, தாழ்வு என்னும் அடிப்படையில் மரியாதைப் பன்மை வழங்கப்பட்டுள்ளது. மேற்

குறிப்பிட்ட வகுப்பினரைக் குறிப்பிடும்போது அவர், அவர்கள் என்னும் விகுதிகள் சேர்க்கப்பட்டன.

பவர் மொழிபெயர்ப்பில் கடவுள், இயேசு ஆகிய இருவர்மட்டுமே மரியாதைப்பன்மை பெறுகின்றனர்.

எடுத்துக்காட்டு :-

தொ.நூல் 15 : 6	ஆபிராகாம் கத்தரை விசுவசித்தான் அவர் அவனுக்கு நீதியாக எண்ணினார்
விப 10 : 22	மோசே தன் கையை வானகத்திற்கு நேராக நீட்டினான்
மத் 6 : 16	சீமோன் பேதுரு பிரத்தியுத்தாரமாக நீர் ஜீவனுள்ள தேவனுடைய கிறிஸ்து

கத்தோலிக்கர் இன்றுவரை பயனபடுத்தி வரும் தமிழ் விவிலியத்தில் கடவுளிற்கும் இயேசுவிற்கும் மட்டுமல்ல, மேலும் நோவா, ஆபிரகாம், மோசே, திருமுழுக்குயோவான், திருத் தூதர்கள் (யூதாஸ் தவிர) சக்கரியா, சிமியோன், நிக்கோதேமு ஆகியோருக்கும் மரியாதைப்பன்மை பயன்படுத்தப்பட்டுள்ளது.

ஆதாம், காயின், ஆபேல், ஈசாக்கு, யாக்கோபு, சாலமோனுக்கு பின்வரும் அரசர்கள் ஆகியோர் ஒருமையில் குறிப்பிடப்படுகின்றனர். புதிய ஏற்பாட்டில் நூற்றுவர் தலைவர், அரச அலுவலர், சட்டவல்லுநர், பரிசேயர், வரிதண்டுவோர், லேவியர், சக்கேயு, லாசர், தொழுநோயாளர் பார்வையற்றோர், பேச்சற்றோர் ஆகியோருக்கும் மரியாதைப் பன்மை மறுக்கப்படுகின்றது.

பெண்களுள் இயேசுவின் தாய் மரியா உட்பட எவருக்கும் மரியாதைப்பன்மை அளிக்கப்படவில்லை.

தமிழ்ச் சமூகத்தில் ஏழைகள், தாழ்த்தப்பட்டோர், நோயுற்றோர், உடல் ஊனமுற்றோர் இவை குறைபாடுகளாகக் கணிக்கப்பட்டன. மேலும் பணம், படிப்பு, பதவி, செல்வாக்கு என்னும் அடிப்படையில் மனிதர் மதிக்கப்பட்டு மரியாதைப் பன்மை அளிக்கப்பட்டது அல்லது மறுக்கப்பட்டது. பெண்களுக்கும் மரியாதைப் பன்மை மறுக்கப்படுகின்றது.

பொது விவிலியத்தில் இயேசுவின்தாய் மரியா உட்பட அனைத்துப் பெண்களுக்கும் மரியாதைப்பன்மை பயன்படுத்தப்படுகின்றது.

- ஆண்களில் இறைத்திட்டத்திற்கு நேராக எதிர்த்து நிற்பவராக் கருதப்படும் சிலருக்கு (ஏரோது, யூதாஸ் போன்றோர்) ஒருமை பயன்படுத்தப்படுகின்றது.

- பழித்துப்பேசும் வேளையிலும்(மாற். 3 : 22, பேய்களின் தலைவனைக் கொண்டே இவன் பேய்களை ஓட்டுகின்றான்)

- தந்தை மகன் உறவு, சகோதர உறவு, நெருங்கிய நட்பு, குரு சீடர் உறவு ஆகியவை வெளிப்படும் போதும் ஒருமை பயன் படுத்தப்படுகின்றது.

- மதிப்பற்றோராகக் கருதப்படும் அனைவருக்கும் மரியாதைப் பன்மை பயன்படுத்தப்படுகின்றது. பார்வை யற்றவர், கேள்வி யற்றவர், ஊனமுற்றவர், நோயாளிகள் அனைவருக்கும் மரியா தைப்பன்மை பயன்படுத்தப்படுகின்றது.

- மேலும் குருடர், செவிடர், முடவர், ஊமையன், மலடி போன்ற சொற்கள் மனித உள்ளங்களைப் புண்படுத்துபவை. இவை தவிர்க்கப்பட்டு மனித நேயத்தை மதிக்கும் சொற்களை பார்வையற்றவர், கேள்வியற்றவர், பேச இயலாதவர், கருவுற இயலாதவர் ஆகிய சொற்கள் பயன்படுத்தப்படுகின்றன.

6) ஆண் – பெண் சமத்துவம்.

இன்று உலகிலுள்ள அநேகமான மொழிகள் ஆண் ஆதிக்க மொழிகளாயுள்ளன. சமுதாயத்தின் எதார்த்தங்களை வெளிப்படுத்தும் இலக்கியங்களும் ஆண் ஆதிக்கத்தை ஆதரிப்பவையாயுள்ளன. எதார்த்தம், இலக்கியம் இவற்றின் பிரதிபலிப்புகள் இலக்கணத்திலும் காணப் படுகின்றன. ஆண்பால் விகுதிகளே பெண்பாலையும் உள்ளடக்கு கின்றன. எடுத்துக்காட்டு :- மனிதன் என்னும் ஆண்பால் விகுதிகொண்ட சொல் ஆணையும் பெண்ணையும் குறிப்பதாக ஏற்றுக்கொள்ளப் படுகின்றது.

இஸ்ராயேல் சமுதாயமும் ஓர் ஆண் ஆதிக்க சமுதாயமே. ஆண், பெண் இருபாலாருக்கும் பொருந்தக்கூறப்படும் விடயங்கள் ஆண் கள் மேல் ஏற்றிக் கூறப்பட்டுள்ளன. இங்கு மனிதன், ஒருவன், எவனும் ஆகிய ஆண்பால் சொற்கள் ஆண்களையும், பெண்களையும் குறிக்கப் பயன்படுத்தப்பட்டுள்ளன.

மத் 4 : 4 “மனிதன் அப்பத்தினால் மட்டுமன்றிக் கடவுள்வாயின்று வரும் ஒவ்வொரு சொல்லினாலும் உயிர்வாழுகின்றான்”

மத் 6 : 24 "ஏவனும் இரு தலைவர்களுக்கு ஊழியம் செய்ய முடியாது"

மத் 7: 9 "தன்மகன் அப்பம் கேட்டால் கல்லைக் கொடுப்பானா?"

மத் 13 : 9 "......... கேட்கச் செவியுள்ளவள் கேட்கட்டும்"
ஆண் ஆதிக்கத்தால் முன்னைய மொழிபெயர்ப்புகளில் ஆண்கள் மேல் ஏற்றிக் கூறப்பட்டவை பொது மொழி பெயர்ப்பில் இருபாலாருக்கும் பொருந்தும் முறையில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. "மனிதன், மனிதராக, எவ னும் எவராக, ஒருவன், ஒருவராக மாறி இரு பாலாருக் கும் பொருந்தும் வகையில் அமைகிறது. இந்த வகை யில் பொது மொழிபெயர்ப்பு - இறைவன் படைத்த இலக்கியம் - ஆண் ஆதிக்கத்தையும் பெண் அடிமைத் தனத்தையும் போக்கி ஆண் பெண் சமத்துவ சமுதாயம் தோன்றுவதற்கு வழி சமைக்கும்.

7) ஏனைய சிறப்புக்கள்

பொது விவிலியத்தின் சிறப்புப் பண்புகளாக எளிய இனிய தமிழ் நடை, தெளி பொருள் மொழி பெயர்ப்பு, மரியாதைப் பன்மை, ஆண் - பெண் சமத்துவ நோக்கு என்பன தனித் தனியே மேலே குறிப் பிடப்பட்டுள்ளன.

பல முன்னுரைகள் பொது விவிலியத்தில் இடம் பெறுகின்றன. முழு விவிலியத்திற்கும் ஒரு முன்னுரை இணைத்திருமுறை நூல் களுக்கு ஒரு தனி முன்னுரை பின்னர் ஒவ்வொரு நூல்களுக்கும் தனி முன்னுரையென பல முன்னுரைகள் படிப்போர் நலன்கருதி இணைக் கப்பட்டுள்ளது.

8) பொருத்தமான தலைப்புகள்

விவிலியம் எழுதப்பட்டபோது எந்தவித பிரிவுகளோ, நிறுத்தக் குறிகளோ பயன்படுத்தப்படவில்லை. ஆரம்பம் முதல் இறுதிவரையும் ஒரே தொடர்ச்சியாகவே இருந்தது. இடைக் காலத்திலேயே விவிலிய நூல்கள் அதிகாரங்களாகவும் வசனங்களாகவும் பிரிக்கப்பட்டன. பவர் மொழிபெயர்ப்பில் தலைப்புகள் பயன்படுத்தப்படவில்லை. கத்தோலிக்க மொழிபெயர்ப்பில் பொருத்தமான தலைப்புகள் தரப்பட்டுள்ளன. பொது விவிலியத்தில் பொருத்தமான பல தலைப்புகள் கொடுக்கப்பட்டுள்ளன.

9) அடிக்குறிப்புகள்

பவர் மொழிபெயர்ப்பில் அடிக்குறிப்பு முற்றாக இல்லை. கத்தோலிக்க மொழிபெயர்ப்பில் பழைய ஏற்பாட்டில் அடிக்குறிப்பு இல்லை எனக் கூறலாம். பொது மொழிபெயர்ப்பில் தேவைக்கேற்ப நான்கு வகையான அடிக்குறிப்புகள் காணப்படுகின்றன.

குறுக்குக் குறிப்புகள் - மத் 10 : 10 - மாற் 9 : 37, லூக் 9: 48, 10: 16, யோவா 13 : 20

மாற்றுப்பாடங்கள் - மத். 10: 4, மூலபாடத்தில் கனனேய சீமோன் என்றுள்ளது

மாற்று மொழிபெயர்ப்புகள் - யோவா 4 : 5, யூதர் சமாரியரோடு பழகுவதில்லை என்னும் சொற்களை சமாரியர் பயன்படுத்தும் பாத்திரங் களை யூதர் பயன்படுத்துவதில்லை எனவும் மொழி பெயர்க்கலாம்.

கவிதை வடிவம்

விவிலியத்தின் மூலத்திலுள்ள கவிதைப்பகுதிகள் கவிதை களாக மொழிபெயர்க்கப்பட்டு கவிதைப் பாணியில் அச்சிடப்பட்டுள்ளது.

பெரிய எழுத்துக்கள்

விவிலியம் எல்லோரும் படித்துப்பயன் பெற பெரிய எழுத்துக் களில் அச்சிடப்பட்டுள்ளது. இதனால் முன்பு வெளியான கத்தோலிக்க விவிலியத்தைவிட பொது விவிலியத்தில் 700 பக்கங்கள் அதிகமாய் உள்ளன.

10) விவிலிய வரலாற்றுக் கால அட்டவணை

விவிலிய வரலாற்று நிகழ்வுகளைப் புரிந்து கொள்வதற்கும், வரலாற்று நிகழ்வுகளின் தொடர்புகளை அறிந்து கொள்வதற்கும் இவ் வாறான வரலாற்று அட்டவணை துணையாக அமைகின்றது. இவ் வரலாற்றுக் குறிப்புகள் மிகத் தெளிவாகவும், வரலாற்று அறிவியல் அடிப்படையிலும் அமைந்துள்ளன.

11) விவிலிய அளவைகளும் அவற்றின் இணைகளும்

விவிலியக் காலத்து அளவைகளை இன்றைய மக்கள் இலகு வில் புரிந்துகொள்ள முடியாது. ஆயினும் புரிந்துகொள்ள ஏதுவாகப் பொது விவிலியத்தில் பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

பொது விவிலியத்தில் நீட்டலளவை, முகத்தலளவை, நிறுத்தலளவை, நாணயம் - பணம் - என்பவற்றின் விவிலியப்பெயர்கள், இணையான தற்கால அளவைகள், இணையான தமிழ் அளவைகள், விவிலியத்தில் இவை தோன்றுகின்ற இடம் அதாவது அதிகாரம் வசனம் என்பன குறிப்பிடப்பட்டுள்ளன.

12) விவிலிய நிகழ்ச்சிப் பகுதிகளின் படங்கள்.

பொது விவிலியத்தின் இறுதிப் பக்கங்களில் இடம்பெறும் விவிலியப்படங்கள் விவிலியத்தைப் படிக்கும்போது அதில் கூறப்பட்டுள்ள விடயங்களைப் புரிந்து கொள்வதற்கு துணையாக அமைகின்றது. தொடக்கநூல் தொடர்பான இடங்கள், விடுதலைப்பயண வழிகள், கானான் நாட்டில் இஸ்ராயேல் மக்களின் நிலப்பகுதிகள், ஒன்றிணைந்த இஸ்ராயேல் அரசு, புதிய ஏற்பாட்டுக்காலப் பலஸ்தீனா நாடு, எருசலேம் நகரம், பவுலின் தூதுப்பயணங்கள் இவ்வாறு விவிலியக்காலங்களின் விடயங்கள் பற்றிய படங்கள் விவிலியத்தின் விளக்கத்திற்குத் துணையாக அமைந்துள்ளன.

நிறைவுரை

கார்த்திகைத் திங்கள், 1995ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட பொது விவிலியத்தைக் கத்தோலிக்கரோ அல்லது சீர்திருத்த சபையினரோ ஏகோபித்த முறையில் வரவேற்பார்கள் என எதிர்பார்க்க முடியாது எனக் கடந்தகால அனுபவங்கள் சுட்டி நிற்கின்றன. பொது மொழிபெயர்ப்பு வரலாற்றில் செப்துவஜிந்தா என்னும் முதல் மொழிபெயர்ப்பிலிருந்து பெரும்பாலும் அநேக மொழிபெயர்ப்புக்கள் ஆரம்ப காலங்களில் கடும் எதிர்ப்பை எதிர்நோக்க வேண்டியிருந்தது. பல மொழிபெயர்ப்பாளர்கள் உடல், உள ரீதியில் பெரும் பாதிப்புக்குள்ளானதுடன், தண்டனைகளையும், உயிர் ஆபத்துக்களையும் எதிர்நோக்கினர்.

பொதுவாக விவிலிய மொழிபெயர்ப்பிற்கு அதிகம் எதிர்ப்புகள் காணப்படும்போது கத்தோலிக்கரும் சீர்திருத்த சபையாரும் இணைந்து வெளியிடும் பொது மொழிபெயர்ப்பு மேலும் கடும் எதிர்ப்பை எதிர்நோக்கவேண்டியேயிருக்கும். இவ்வாறான எதிர்ப்புகள் தோன்றுவதற்கு பல காரணங்களை முன்வைக்கமுடியும். எனினும் அடிப்படைக் காரணம் இவ்வாறன மொழிபெயர்ப்புகள் ஏன் செய்யப்பட்டன, என்பது பற்றிப் போதிய அறிவும் தெளிவும் இன்மையாகும். குறிப்பிட்ட மொழிபெயர்ப்பில் காணப்படும் சிறப்பான பண்புகளைப்பற்றிய போதிய அறிவைப் பெறும் போது மக்கள் இவற்றை இலகுவில் ஏற்கமுடியும்.

எனவே பொது மொழிபெயர்ப்பை மக்கள் ஏற்றுக்கொள்வதற்கும், படித்துச் சிந்தித்துப் பயன்பெறுவதற்கும் இதில் அடங்கி யுள்ள சிறப் பான குண இயல்புகள் பற்றிய அறிவு மக்களுக்கு அளிக்கப்பட வேண்டும். இவ்வாறு செயற்படும்போது ஆரம்பத் தில் பல எதிர்ப்புகள் தோன்றினாலும் காலக்கிரமத்தில் ஏற்றுக் கொள்ளப்படும் என்பது விவிலிய மொழிபெயர்ப்பு வரலாறு கூறும் உண்மை.

உசாத்துணைகள்:

1. கு. ஏரோணிமுசு, பொது விவிலியம் ஒரு அறிமுகம், அருள்வாக்கு மன்றம், திருச்சிராப்பள்ளி, 1995.
2. திருவிவிலியம் வெளியீட்டு நினைவு மலர், திண்டிவனம், 1996.
3. சபாபதி குலேந்திரன், கிறிஸ்தவ தமிழ் வேதாகமத்தின் வரலாறு

பின் இணைப்பு

பொது விவிலிய நூல்களின் பெயர்கள்

புதிய பெயர்கள்	பழையபெயர்கள் (க.மொ. – ப.மொ.)		சுருக்கக்குறியீடு

அ) பழைய ஏற்பாடு

1. தொடக்க நூல்	ஆதியாகமம்	ஆதியாகமம்	தொ. நூ
௨. வீடுதலைப்பயணம்	யாத்திராகமம்	யாத்திராகமம்	வி.ப.
3. லேவியர்	லேவியராகமம்	லேவியராகமம்	லேவி
4. எண்ணிக்கை	எண்ணாகமம்	எண்ணாகமம்	எண்
5. இணைச்சட்டம்	உபாகமம்	உபாகமம்	இச
6. யோசுவா	யோசுவா	யோசுவா	யோசு
7. நீதித் தலைவர்கள்	நீதிபதிகள்	நியாதிபதிகள்	நீதி
8. ரூத்து	ரூத்	ரூத்	ரூத்
9. 1 சாமுவேல்	1 சாமுவேல்	1 சாமுவேல்	சாமு
10. ௨ சாமுவேல்	௨ சாமுவேல்	௨ சாமுவேல்	௨ சாமு
11. 1 அரசர்கள்	1 அரசர்	1 இராஜாக்கள்	1 அர
12. ௨ அரசர்கள்	௨ அரசர்	௨ இராஜாக்கள்	௨ அர
13. 1 குறிப்பேடு	1 நாளாகமம்	1 நாளாகமம்	குறி
14. ௨ குறிப்பேடு	௨ நாளாகமம்	௨ நாளாகமம்	௨ குறி
15. எஸ்ரா	எஸ்ரா	எஸ்ரா	எஸ்ரா
16. நெகேமியா	நெகேமியா	நெகேமியா	நெகே
17. எஸ்தர்	எஸ்தர்	எஸ்தர்	எஸ்
18. யோபு	யோபு	யோபு	யோபு
19. திருப்பாடல்கள்	சங்கீதங்கள்	சங்கீதம்	திபா

௨0. நீதிமொழிகள்	பழமொழிஆகமம்	நீதிமொழிகள்	நீமொ
௨1. சபை உரையாளர்	சங்கத்திருவுரை	பிரசங்கி	சஉ
௨௨. இனிமை மிகுபாடல்	உன்னதசங்கீதம்	உன்னதபாட்டு	இபா
௨3. எசாயா	இசையாஸ்	ஏசாயா	எசா
௨4. எரேமியா	எரேமியாஸ்	எரேமியா	எரே
௨5. புலம்பல்	புலம்பல்	புலம்பல்	புல
௨6. எசேக்கியேல்	எசேக்கியேல்	எசேக்கியல்	எசே
௨7. தானியேல்	தானியேல்	தானியேல்	தானி
௨8. ஓசேயா	ஓசே	ஓசியா	ஓசே
௨9. யோவேல்	யோவேல்	யோவேல்	யோவே
30. ஆமோஸ்	ஆமோஸ்	ஆமோஸ்	ஆமோ
31. ஒபதியா	அப்தியாஸ்	ஒபதியா	ஒப்
32. யோனா	யோனாஸ்	யோனா	யோனா
33. மீக்கா	மிக்காயேல்	மீகா	மீக
34. நாகூம்	நாகும்	நாகூம்	நாகூ
35. அபகூக்கு	அபாக்கூக்	ஆபகூக்	அப
36. செப்பனியா	செப்பனியாஸ்	செப்பனியா	செப்
37. ஆகாய்	ஆகாய்	ஆகா	ஆகா
38. செக்கரியா	சக்கரியாஸ்	சகரியா	செக்
39. மலாக்கியா	மலாக்கியா	மல்கியா	மலா

ஆ) இணைத் திருமுறை நூல்கள்

1. தோபித்து	தொபியாசு ஆகமம்		தோபி
௨. யூதித்து	யூதித்		யூதி
3. எஸ்தர்	.. ..		எஸ் (கி)
4. சாலமோனின் ஞானம்	ஞானாகமம்		சாஞா
5. சீராக்கின் ஞானம்	சீராக் ஆகமம்		சீஞா
6. பாருக்கு	பாருக்		பாரு
7. தானியேல்இணைப்புகள்	.. ..		தானி (இ)
8. 1 மக்கபேயர்	1 மக்		1 மக்
9. ௨ மக்கபேயர்	௨ மக்		௨ மக்

இ) புதிய ஏற்பாட்டு நூல்கள்

1. மத்தேயு நற்செய்தி	மத்தேயு	மத்தேயு	மத்
௨. மாற்கு நற்செய்தி	மாற்கு	மாற்கு	மாற்
3. லூக்கா நற்செய்தி	லூக்காஸ்	லூக்கா	லூக்
4. யோவான் நற்செய்தி	அருளப்பர்	யோவான்	யோவா
5. திருத்தூதர் பணி	அப்போஸ்தலர் பணி	அப்போஸ்தலர் நடபடிகள்	திப
6. உரோமையர்	உரோமைர்	ரோமர்	உரோ
7. 1 கொரிந்தியர்	1 கொரிந்தியர்	1 கொரிந்தியர்	1 கொரி
8. ௨ கொரிந்தியர்	௨ கொரிந்தியர்	௨ கொரிந்தியர்	௨ கொரி
9. 1 கலாத்தியர்	கலாத்தியர்	கலாத்தியர்	கலா
10. எபேசியர்	எபேசியர்	எபேசியர்	எபே

11. பிலிப்பியர்	பிலிப்பியர்	பிலிப்பியர்	பிலி
12. கொலோசையர்	கொலோசேயர்	கொலோசேயர்	கொலோ
13. 1 தெசலோனிக்கர்	1 தெசலோனிக்கர்	1 தெசலோனிக்கர்	1 தெச
14. ௨ தெசலோனிக்கர்	௨ தெசலோனிக்கர்	௨ தெசலோனிக்கர்	௨ தெச
15. 1 திமோத்தேயு	1 தீமோத்தேயு	1 தீமோத்தேயு	1 திமோ
16. ௨ திமோத்தேயு	௨ தீமோத்தேயு	௨ தீமோத்தேயு	௨ திமோ
17. தீத்து	தீத்து	தீத்து	தீத்
18. பிலமோன்	பிலமோன்	பிலமோன்	பில
19. எபிரேயர்	எபிரேயர்	எபிரேயர்	எபி
௨0 யாக்கோபு	யாகப்பர்	யாக்கோபு	யாக்
௨1. 1 பேதுரு	1 இராயப்பர்	1 பேதுரு	1 பேது
௨௨ ௨ பேதுரு	௨ இராயப்பர்	௨ பேதுரு	௨ பேது
௨3. 1 யோவான்	1 அருளப்பர்	1 யோவான்	1 யோவா
௨4. ௨ யோவான்	௨ அருளப்பர்	௨ யோவான்	௨ யோவா
௨5. 3 யோவான்	3 அருளப்பர்	3 யோவான்	3 யோவா
௨6. யூதா	யூதா	யூதா	யூதா
௨7. திருவெளிப்பாடு	திருவெளிப்பாடு	வெளிப்படுத்தின விசேசம்	திவெ

St. Joseph's Catholic Press,
Jaffna-1999